# வங்கியில் கல்விக் கடன் பெற

**கடன் வழங்க வில்லை எனில் எழுத வேண்டிய மாதிரி கடிதம்.**

**(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)**

அனுப்புநர் நாள்: . . . . . . .

**(பெயர் முகவரி எழுதவும்)**

பெறுநர்

பொது தகவல் அதிகாரி

. . . .(**முழு முகவரி எழுதவும்**) . . .

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6 (3)ன்படி - கல்விக் கடன் தொடர்பான தகவல் அளிக்கக் கோருதல் - தொடர்பாக.

பார்வை: எனது விண்ணப்பம் நாள்: ----------

- - - - -

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு (6)-ன் கீழ் கல்விக்கடன் தொடர்பாக, நான் கீழே கேட்டுள்ள தகவல்களை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1) இந்த கல்வி ஆண்டில் மொத்தம் எத்தனைப் பேர் கல்விக் கடன் வேண்டி தங்கள் வங்கியில் விண்ணப்பித்துள்ளார்கள்?

2) அ) . . . . நிதியாண்டில் தங்கள் வங்கியில் மொத்தம் எவ்வளவு ரூபாய் கல்விக் கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆ) அதில் எத்தனை பேருக்கு, எவ்வளவு ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது?

3) அ) ஒவ்வொருவருக்கும் வழங்கியத் தொகை, அவர்கள் விண்ணப்பித்தத் தொகை, ஆகியவைகளை தனித்தனியாக அவர்களின் பெயர், முகவரியுடன் வழங்கவும். ஆ) எத்தனை பேருக்கு கல்விக் கடன் வழங்கப்படவில்லை?

4) ஒதுக்கீடு செய்ததில், வழங்கப்படாமல் இன்னும் எவ்வளவு ரூபாய் உள்ளது?

5) அ) நான் கல்விக் கடன் வேண்டி விண்ணப்பித்த மனு தங்கள் வங்கியில் எந்த தேதியில் கிடைக்கப் பெற்றது? ஆ) அது தங்கள் அலுவலக பதிவேட்டில் பதியப்பட்டதா? இ) ஆம் எனில் அலுவலக கோப்பு எண் மற்றும் பதியப்பட்ட பக்கத்தின் ஒளிநகல் ஆகியவைகளை வழங்கவும்.

6) ஒருவர் கல்விக்கடன் பெற என்னென்ன ஆவணங்கள் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்?

7) அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஜாமீன் இல்லாமல் எவ்வளவு தொகைவரை, கல்விக் கடன் வழங்கலாம் என்று மத்தியஅரசு அல்லது தங்கள் வங்கியின் விதிகளில் உள்ளது? அதன் நகல்கள் வழங்கவும்.

8) அ) நான் கல்விக் கடன்பெற தேவையான அனைத்து ஆவணங்களும் இணைத்து அனுப்பியுள்ளேனா? ஆ) இல்லை எனில் அதுபற்றி எனக்குத் தெரிவிக்கப்பட்டதா? ஆம் எனில் அதன் ஒளி நகல் ஒன்று வழங்கவும்.

9) அ) நான் விண்ணப்பித்த நாளுக்கு பிறகு விண்ணப்பித்த மனுக்களில் எத்தனை பேருக்கு கல்விக் கடன் வழங்கப்பட்டது? ஆ) இந்த ஆண்டு கல்விக் கடன் வழங்கிய விவரங்கள் பதியப்பட்டுள்ள பதிவேட்டின் நகல் ஒன்று வழங்கவும்.

10) கல்விக் கடன் வழங்குவது தொடர்பாக மத்திய அரசு, தங்கள் வங்கியின் தலைமை அலுவலகம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்கள், (Order, direction or manual copy) கல்விக் கடன் வழங்குதல்கள் தொடர்பான ***நீதிமன்றங்களின்*** உத்தரவு மற்றும் கிளை மேலாளர் அதிகாரங்களின் நகல்கள் வழங்கவும்.

11) கல்லூரிக் கட்டணங்கள் முழுமையாக வழங்கவேண்டாம் என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட தொகைதான் வழங்க வேண்டும் என்றோ தங்கள் வங்கி மற்றும் மத்திய அரசு உத்தரவுகள் வழங்கியிருந்தால், அதன் நகல்கள் வழங்கவும்.

12) எனக்கு, என்ன காரணத்தினால் முழு கல்விக் கடன் வழங்கப்படவில்லை எனபதற்கான காரணத்தை தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005-ன் பிரிவு 4(1)d ன்படி தெரிவிக்கவும்.

13) எனது கல்விக் கடன் தொடர்பான கோப்பின் அனைத்துப் பக்கங்களின் நகல்கள் வழங்கவும்.

14) கல்விக்கடன் பெற குறைந்த பட்சம் எத்தனை சதவிகிதம் மார்க் வாங்கியிருக்க வேண்டும் என்ற அரசு மற்றும் வங்கியின் விதி அல்லது வழிகாட்டுதல்களின் நகல்கள் வழங்கவும்.

15) மேற்குறிப்பிட்ட காலத்தில் கல்விக்கடன் வழங்கப்பட்ட அனைத்துக் கோப்புகளையும் பார்வையிட, தேவையான பக்கங்களின் சான்று அளிக்கப்பட்ட நகல்கள் எடுத்துக் கொள்ள, எனக்கு நேரம், நாள் ஒதுக்கி அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.

மேற்படி தகவல்களைப் பெறுவதற்காக தங்கள் வங்கியில் செலுத்தியுள்ள ரூ.10-க்கான ரசீது இத்துடன் இணைத்துள்ளேன்.

இப்படிக்கு

**(கையெப்பம் மற்றும் பெயர்)**